
# தமிழியல் ஆய்வுத் தடங்கள்

(தேசியக் கருத்தரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு)



பதிப்பாசிரியர்கள்

ப. ஆனந்தகுமார்

கு. கார்த்திகா

ஆ. ரூபா


தமிழியல் ஆய்வுத் தடங்கள்

(தேசியக் கருத்தரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு)

பதிப்பாசிரியர்கள்

ப. ஆனந்தகுமார்

கு. கார்த்திகா

ஆ. ரூபா


ம. வித்யா

யல் ஆய்வுத் தடங்கள்
ிய கருத்தரங்கக் கட்டுரைகள்)


| | | |
|---|---|---|
| முதல் பதிப்பு | : | மார்ச் 2016 |
| உரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| பக்கங்கள் | : | 888 |
| வெளியீடு | : | **போதிவனம்**<br>அகமது வணிக வளாகம், தரைத்தளம்,<br>12/293, இராயப்பேட்டை நெடுஞ்சாலை,<br>இராயப்பேட்டை, சென்னை - 600 014.<br>அலைபேசி: +91 - 9841450437<br>bodhivanam@gmail.com |
| நூல் வடிவமைப்பு | : | கே.எஸ். கருணா பிரசாத் |
| விலை | : | **600** |

**Thzmizhiyal Aaivu Thadangal**
**(Research papers presented in National Seminar)**

| | | |
|---|---|---|
| First Edition | : | March 2016 |
| Copyright | : | Editors |
| Pages | : | 888 |
| Publisher | : | **Bodhivanam**<br>Ahmed Complex Ground Floor,<br>12/293, Royapettah High Road,<br>Royapettah, Chennai-600 014.<br>Mobile : +91 - 9841450437 |
| Design | : | K.S. Karuna Prasad |
| Price | : | **600** |
| ISBN No. | : | 978-93-80690-36-0 |



Scanned by CamScanner

| | | | |
|---|---|---|---|
| 66. | சுகன்யா.ம | சங்க நெய்தல் திணைப்பாடல்களில் தலைவியின் உணர்வுப்போராட்டம் | 415 |
| 67. | சுமதி.து | தமிழியல் ஆய்வில் மயிலை. சீனி.வேங்கடசாமி | 419 |
| 68. | சுரேஷ்பாபு.சு | அகநானூற்றில் விழாக்கள் | 426 |
| 69. | சுஜா.ச.அ | கைலாசபதியின் பார்வையில் மகாகவி | 430 |
| 70. | செந்தமிழ் செழியன்.சு | திலகவதி கூறும் கற்புக் கோட்பாடு குறித்த எதார்த்தவாதம் | 435 |
| 71. | செல்வசுப்பிரமணியன்.வெ | தமிழ்ப் பெண் கவிஞர்களின் சமுதாயப் பார்வை | 439 |
| 72. | சோழன்.ந | பௌராவின் வீரநிலைக் கோட்பாடு நோக்கில் தமிழ்ப் புராணக் கதைப்பாடல்களில் உருமாறல் | 446 |
| 73. | ஞானமூர்த்தி.சி | தந்தை பெரியாரின் மொழியியல் சிந்தனை | 451 |
| 74. | தமிழரசி.க.சு | சங்க அகஇலக்கியங்களில் வாடைக்காற்று – ஓர் ஆய்வு | 455 |
| 75. | தரணி.த | கணேசையரின் தொல்காப்பிய எழுத்ததிகாரக் குறிப்புரையின் சிறப்புகள் | 460 |
| 76. | திலிப் ஏங்கல்ஸ்.அ | புறநானூற்றில் தும்பைத் திணை | 471 |
| 77. | துர்க்காதேவி.பொ | இலக்கியக் கலையில் முன்னக் கோட்பாடு | 476 |
| 78. | துரைப்பாண்டியன்.அ | மறுபக்கம் நாவலில் சாதிச்சிக்கல்கள் | 482 |
| 79. | துளசி.ம | புறநானூற்றில் இசைக்கருவிகள் | 489 |


Scanned by CamScanner

# கைலாசபதியின் பார்வையில் மகாகவி

ச.அ. கஜா,
உதவிப்பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம்,
பாத்திமாக் கல்லூரி (தன்னாட்சி), மதுரை.

இலக்கிய விமர்சனம் குறித்து கைலாசபதிக்கு ஒரு தனிப்பாதை, பதிவு இருந்தது. சமுதாய மாற்றத்திற்கு உதவும் வகையில் விமர்சனம் அமைய வேண்டும் என்றும் உழைக்கும் வர்க்கம் அதைப்பயன்படுத்த வேண்டும் என்றும் விரும்பியவர். ஈழத்தமிழ் இலக்கியத்துறைக்கு இவர் ஆற்றிய பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது. தமிழ் இலக்கியத் திறனாய்வுத் துறையிலே இவர் ஆற்றிய பணி திறனாய்வுக்கு முன்னோடியாகக் கருதப்படுகின்றது. தனிமனிதனின் சுதந்திர வளர்ச்சி அனைத்து மனிதர்களின் சுதந்திர வளர்ச்சியோடு பின்னிப்பிணைந்துள்ளது. இந்த இலட்சியத்தை தமது எழுத்தாலும் நடைமுறையாலும் செயல்படுத்த முனைந்தவர் கைலாசபதி.

இலக்கியத்திற்கும் சமூகத்திற்கும் இடையேயான உறவை மார்க்சியக் கண்ணோட்டத்தின் துணை கொண்டு ஆராய்ந்து, தமது இலக்கிய ஆய்விற்கும் அச்சமூகவியல் அணுகுமுறையையே ஆதாரமாகக் கொண்டவர். ஒவ்வொரு காலத்தில் நிலவுகின்ற சமுதாய அமைப்பின் தன்மையைப் பொறுத்தே அச்சமூகத்தில் கலை, இலக்கியம், பண்பாடு போன்றவை அமையும். சமூக மாற்றத்திற்கேற்ப இதன் தன்மைகளும் மாறும் என்பதனைத் தமிழ் இலக்கிய ஆய்வில் கோட்பாட்டு அடிப்படையில் வெளிப்படுத்திய முதல் அறிஞர் கைலாசபதி ஆவார். கவிதையைக் குறிப்பிடுகின்றபோது உள்ளடக்கம் ஒரு மனிதனின் உயிர் என்றால் உருவகம் அதன் உடல் என்பார் கைலாசபதி. அழகியலையும் கோட்பாட்டு அடிப்படையில் ஆராய்ந்தவர். இலக்கியமும் சமுதாயமும் உலக அரங்கில் எவ்வாறு இயங்குகின்றன என்பதை எடுத்துக்காட்ட ஒப்பிலக்கிய ஆய்வைப் பயன்படுத்தினார். மார்க்சியலை எவ்வாறு தமிழ் இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன என்பதை ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டும் இவரது ஆய்வு.

கைலாசபதியின் ஆய்வுகள் தமிழ்ச் சமுதாயத்தின் வாழ்க்கைக் கூறுகளில் அரசியல், பொருளியல், சமூகவியல், அழகியல் போன்றவற்றை அடிப்படையாகக்கொண்டு இலக்கியம் சொல்வதை எடுத்துரைக்கிறார். இலக்கியத்துறையிலும் இதழியல் துறையிலும் கல்வித்துறையிலும் சிறந்தவராக விளங்கியவர்.

Scanned by CamScanner